## நெல் பயிரைத் தாக்கும் ஆணைக்கொம்பன் ஈ கட்டுப்படுத்த புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆலோசனை

நடப்பு சம்பா பருவத்தில் நடவு வயலில் பல்வேறு பூச்சி மற்றும் நோய் தாக்குதல் காணப்படுகிறது. அதில் நட்ட சிறிது நாட்களில் ஆணைக்கொம்பன் ஈ தாக்குதல் அதிகமாக காணப்படுகிறது இதனை கண்டறியும் முறை மற்றும் கட்டுப்படுத்தும் முறை குறித்து புதுக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சு.அன்பரசன் அவர்கள் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் புதுக்கோட்டை வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவத்தில் பெய்து வரும் மழையினைப் பயன்படுத்தி நெல் பயிர் அநேக இடங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது விவசாயிகள் பயிர்களை கண்காணிப்பது அவசியம் ஏனென்றால் தற்போது ஆணைக்கொம்பன் ஈ தாக்குதல் பரவலாக காணப்படுகிறது.

தாக்குதலின் அறிகுறிகளை பார்க்கும் போது புழுக்கள் தூர்களை துளைத்து உட்சென்று வளரும் பகுதியை உண்கிறது, தாக்கப்பட்ட தூர்களில் நெற்கதிர் வராது, மேலும் வளர்ச்சிக்குன்றி காணப்படும் மற்றும் தாக்கப்பட்ட தூர்கள் வெங்காய இலைபோல் (அ) வெள்ளித்தண்டு போல் காட்சியளிக்கும்

### பூச்சியினை கண்டறி விபரம்

இந்த ஈயானது நீளமான, உருளை வடிவத்தில், பளபளப்பான வெள்ளை (அ) சிவப்பு (அ) இளஞ்சிவப்பு நிற முட்டைகளை இலைகளின் அடிப்பகுதியில் தனியாகவோ (அ) கூட்டமாகவோ இடும். புழு 1 மி.மீ நீளமுடன் இலையுறையின் கீழே ஊர்ந்து சென்று உண்கிறது அவை உண்ட இடத்தைச் சுற்றி ஒரு முட்டை வடிவ உள்ளிடம் உருவாகும், கூட்டுப்புழு வெளிவரும் போது அதன் உணர்கொம்புகள் மூலமாக குழலினைச் சுற்றி, வெள்ளித் தண்டின் நுனிப்பகுதிக்கு சென்று, அதனுடைய பின் பகுதி மட்டும் வெளியே தள்ளிக்கொண்டு நிற்கும்.

### கட்டுப்படுத்தும் முறை

**பொருளாதார சேத நிலை அளவு :** 10 சதவிகித வெள்ளித்தண்டுகள் (அ) வெங்காய இலைகளை விட பாதிப்பு அதிகமாக இருந்தால் மகசூல் இழப்பு ஏற்படும் . இதனை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்த அறுவடை செய்த பின் நிலத்தை உடனடியாக உழ வேண்டும், அருகில் வளர்ந்து வரும் பூச்சி உண்ணக்கூடிய மாற்றுவகைப் பயிர்களை அகற்ற வேண்டும், தழைச்சத்து உரங்களை பரிந்துரை செய்யப்பட்ட அளவு மட்டுமே பயன்படுத்த வேண்டும் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளான கார்போசல்பான் 25 சத ஈசி 300 மில்லி (அ) பிப்ரோனில் 5 சத எஸ்.சி 400 மில்லி ஆகிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றை ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கலாம். மேலும் விபரங்களுக்கு தங்கள் பகுதி வேளாண் விரிவாக்க அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன் பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.